# March 10, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. மேற்காசிய போர் நிலவரம் காரணமாக கச்சா எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயுக்கு கடும் தட்டுப்பாடு ஏற்படும் நிலை உருவாகியுள்ள சூழலில், தமிழகம் உள்பட பல்வேறு மாநிலங்களில் வணிக சமையல் எரிவாயு சிலிண்டர்களுக்கு கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. பல்வேறு இடங்களில் வணிக சமையல் எரிவாயு சிலிண்டர்கள் விநியோகம் நிறுத்தப்பட்டுள்ளது.

(i) வீட்டு உபயோக சமையல் எரிவாயு சிலிண்டர்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுவிடாமல் இருப்பதற்காக அதற்கான முன்பதிவுக்கு கட்டுப்பாடு உள்ளிட்ட பல்வேறு அவசரகால நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொண்டுள்ளது. மத்திய பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயுத் துறை அமைச்சர் ஹர்தீப் சிங் புரி தலைமையில் தில்லியில் நடைபெற்ற உயர்நிலைக் குழு ஆய்வுக் கூட்டத்தில் இது தொடர்பாக முடிவுகள் எடுக்கப்பட்டன.இதுகுறித்து மத்திய அரசு அதி காரிகள் கூறியதாவது:

- சமையல் எரிவாயு சிலிண்டர் முன்பதிவு 21 நாள்கள் இடைவெளியில் அனுமதிக்கப்பட்ட நிலையில், தற்போது 25 நாள்களாக உயர்த்தப்பட்டுள்ளது. அதன்படி, சிலிண்டர் விநியோகிக்கப்பட்ட 25 நாள்களுக்குப் பிறகே அடுத்த முன்பதிவை இனி செய்யமுடியும்.
- அனைத்துப் பொதுத் துறை எண்ணெய் விற்பனை நிலையங்களும் வீட்டு உபயோக சமையல் சிலிண்டர்களை மட்டுமே விநியோகிப்பதை உறுதிப்படுத்த வேண்டும் எனக் கேட்டுக்கொள் ளப்பட்டுள்ளன.

(ii) பிகார், மகாராஷ்டிரம், பஞ்சாப், கர்நாடகம் உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களில் சமையல் எரிவாயு மற்றும் பெட்ரோல், டீசலுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகின.

(iii) பெட்ரோல், டீசல் சில்லறை விற்பனை விலையை உயர்த்த வேண்டாம் என இந்தியன் ஆயில் (ஐஓசிஎல்), பாரத் பெட்ரோலியம் மற்றும் ஹிந் துஸ்தான் பெட்ரோலியம் உள்ளிட்ட பொதுத்துறை எண் ணெய் நிறுவனங்களை மத்திய அரசு அறிவுறுத்தியுள்ளது. குறிப்பாக, சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை பீப்பாய்க்கு 130 டாலருக்கு மேல் செல்லாத வரை விலையில் மாற்றம் செய்ய வேண்டாம்; தற்போதைய தற்காலிக இழப்பை தாங்கிக் கொள்ள வேண்டும் என எண்ணெய் நிறுவனங்களை மத்திய அரசு கேட்டுக்கொண்டுள்ளது. எனவே, பெட்ரோல், டீசல் சில் லறை விற்பனை விலை உடனடியாக உயர்த்தப்பட வாய்ப்பில்லை.

2. கூடங்குளம் 3, 4-ஆவது அணு உலையில் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தை குறைந்த விலையில் தமிழகத்துக்கு வழங்க வேண்டும் என மத்திய மின் துறைக்கு தமிழ்நாடு மின்வாரியம் கோரிக்கை விடுத்துள்ளது.

(i) திருநெல்வேலி மாவட்டம் கூடங்குளத்தில் செயல்பட்டு வரும் அணுமின் நிலையத்தில் தலா 1,000 மெகாவாட் திறனில் இரு அலகுகளில் மின் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. அதிலிருந்து தமிழகத்துக்கு தினமும் 1,152 மெகாவாட்டும், மற்ற மின்சாரம் பிற மாநிலங்களுக்கும்ஒதுக் கப்பட்டுள்ளது. அதன்படி, ஒரு யூனிட் மின்சாரத்தை சராசரியாக ரூ.5.40-க்கு தமிழக மின்வாரியம் கொள்முதல் செய்கிறது.

(ii) இதனிடையே கூடங்குளம் அணு மின்நிலயத்தில் தலா 1,000 மெகாவாட் திறனில் 3 மற்றும் 4-ஆவது அணு உலைகள் அமைக்கப்பட்டு வருகின்றன. அதில் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தை தமிழகத்துக்கு யூனிட் ரூ.5.91-க்கு விற்க இருப்பதாக மத்திய அரசு அறிவித்துள்ளது.

(iii) இதுகுறித்து மின்வாரிய அதிகா ரிகள் சிலர் கூறியதாவது:

- புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறை மூலம் உற்பத்தி செய்யப்பட்டு பேட்டரியில் சேமிக்கப்படும் மின்சாரம் யூனிட் ரூ.4-க்கு மின்வாரியத்துக்கு கிடைக்கிறது. இதனால், கூடங்குளம் மின் நிலையத்தில் இருந்து கிடைக்கும் மின்சாரத்தை அதிக விலை கொடுத்து கொள்முதல் செய்ய இயலாது.
- குஜராத்தின் காக்ராபர் அணு மின் நிலையத்தில் உற்பத்தியாகும் மின்சாரத்தை அந்த

மாநிலத்துக்கு யூனிட் ரூ.5.60-க்கு வழங்க மத்திய அரசு தயாராக இருந்தது. ஆனால், விலையைக் குறைத்து வழங்க மாநில அரசு கோரிக்கை விடுத்த தன்பேரில், யூனிட் ரூ.4.50-க்கு மத்திய அரசு வழங்கி வருகிறது.

- அதேபோல, கூடங்குளம் 3 மற்றும் 4-ஆவது அணு உலை மின்சாரத்தை குறைந்த விலையில் தமிழகத்துக்கு வழங்க வலியுறுத்தி மத்திய மின் துறையின் தென் மாநில மின்சார குழுவுக்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என்றனர்.

3. ஈரானின் மிக உயரிய அதிகாரமிக்க பதவியான 'தலைமை மதகுரு' பொறுப்புக்கு, மறைந்த அயதுல்லா அலி கமேனியின் மகன் மோஜ்தபா கமேனி (56) அதிகார பூர்வமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

(i) கடந்த பிப். 28-ஆம் தேதி, அமெரிக்கா-இஸ்ரேலின் கூட்டுத் தாக்குதலில், ஈரானின் தலைமை மதகுரு அயதுல்லா அலி கமேனி கொல்லப்பட்டார். இதைத் தொடர்ந்து, அந்நாட்டின் 88 மூத்த மதகுருமார்கள் கொண்ட 'வல்லுநர் பேரவை' திங்கள்கிழமை கூடி, மோஜ்தபா கமேனியைப் புதிய தலைமை மதகுருவாக அறிவித்தது.

(ii) மோஜ்தபா கமேனி இதுவரை பொதுவெளிக்கு அதிகம் வராதவர் என்றாலும், ஈரானில் பலம் வாய்ந்த புரட்சிகர காவல் படையுடன் (ஐஆர்ஜிசி) மிக நெருக்கமான தொடர்பு கொண்டவர். வாரிசு அரசியல் என்ற விமர்சனங்கள் எழுந்தபோதிலும், தற்போது நிலவும் போர்ச்சூழலில் அமெரிக்கா, இஸ்ரேலின் ஆதிக்கத்தைச் சமாளிக்க மோஜ்தபா கமேனியே சரியானவர் எனப் பேரவை கருதுகிறது.

4. பிராந்திய போர்ச்சூழல் மற்றும் இஸ்ரேலின் தீவிர தாக்குதல்களைக் கருத்தில் கொண்டு, லெபனான் நாடாளுமன்ற பதவிக்காலத்தை மேலும் 2 ஆண்டுகளுக்கு நீட்டித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

(i) லெபனான் நாடாளுமன்றத்தில் நடைபெற்ற வாக்கெடுப்பில், இத்தீர்மானத்துக்கு ஆதரவாக 76 உறுப்பினர்களும், எதிர்ப்புத் தெரிவித்து 41 பேரும் வாக்களித்தனர். ஹிஸ்புல்லா அமைப்பின் 13 நாடாளுமன்ற உறுப்பினர்களும் இந்த நீட்டிப்புக்கு ஆதரவளித்தனர்.

(ii) ஈரானுக்கு ஆதரவாக இஸ்ரேல் மீது ஹிஸ்புல்லா அமைப்பினர் ஏவுகணைத் தாக்குதலில் ஈடுபட்டனர். இதையடுத்து லெபனான் எல்லைப் பகுதிகளில் தரைவழித் தாக்குதல்களைத் தீவிரப்படுத்திய இஸ்ரேல் ராணுவம், ஹிஸ்புல்லா அமைப்பினரைக் குறிவைத்துத் தாக்குதல் நடத்தி வருகிறது.

(iii) இஸ்ரேலின் ரசாயன ஆயுதத்துக்கு எதிர்ப்பு:

- இதனிடையே, தெற்கு லெபனானில் உள்ள குடியிருப்புப் பகுதிகளில் இஸ்ரேல் ராணுவம் 'வெள்ளை பாஸ்பரஸ்' குண்டுகளைப் பயன்படுத்தி சட்ட விரோதத் தாக்குதலில் ஈடுபட்டதாக மனித உரிமைகள் கண்காணிப்பகம் குற்றஞ்சாட்டியது.
- யோமோர் கிராமத்தில் நடத்தப்பட்ட இத்தாக்குதல் தொடர்பான புகைப்படங்களை ஆய்வு செய்ததில், சர்வதேச விதிகளை மீறி மக்சன் வாழும் புகதிகளில் இந்த அபாயகரமான ரசாயன ஆயுதம் பயன்படுத்தப்பட்டது உறுதி செய்யப்பட்டதாக அந்த அமைப்பு கவலை தெரிவித்தது.

5. தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமாரை பதவி நீக்குவதற்கான தீர்மானத்தை நாடாளுமன்றத்தில் விரைவில் தாக்கல் செய்ய எதிர்க்கட்சிகள் திட்டமிட்டிருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

(i) எஸ்.ஐ.ஆர். விவகாரத்தால் பல மாநிலங்களில் லட்சக்கணக்கான வாக்காளர்களின் பெயர்கள், வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டுள்ளன.

(ii) இதற்கு எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களான மேற்கு வங்கம், தமிழகம் உள்ளிட்டவை கடும் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றன. சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், பாஜகவும், தேர்தல் ஆணையமும் திட்டமிட்டு வாக்காளர்கள் பெயர்களை நீக்கிவிட்டதாக மேற்கு வங்கத்தை

ஆளும் திரிணமூல் காங்கிரஸ் குற்றஞ்சாட்டி வருகிறது.

(iii) இந்நிலையில், தலைமைத் தேர்தல் ஆணையர் பதவியில் இருந்து ஞானேஷ் குமாரை நீக்குவதற்கான தீர்மானத்தை நாடாளுமன்றத்தில் விரைவில் தாக்கல் செய்ய எதிர்க்கட்சிகள் திட்டமிட்டிருப்பதாக புதிய தகவல் வெளியாகியுள்ளது. பதவி நீக்குவதற்கான வரைவு தயாரிக்கப்பட்டு விட்டதாகவும், இந்த வாரத்தில் அது தாக்கல் செய்யப்பட வாய்ப்பு இருப்பதாகவும் அந்தத் தகவல்கள் கூறுகின்றன.

6. தமிழ்நாடு மற்றும் கேரளத்தில் மொத்தம் ரூ.16,450 கோடி மதிப்பிலான பல்வேறு திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி, நிறைவடைந்த திட்டங்களை பிரதமர் மோடி புதன்கிழமை (மார்ச் 11) தொடங்கி வைக்க உள்ளார். இதுதொடர்பாக பிரதமர் அலுவலகம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

(i) பிரதமர் மோடி புதன்கிழமை கேரளம் மற்றும் தமிழ்நாட்டுக்கு வர வுள்ளார். அப்போது திருச்சியில் இருந்தபடி சுமார் ரூ.5,650 கோடி மதிப்பிலான புதிய வளர்ச்சித் திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி, நிறைவடைந்த வளர்ச்சி திட்டங்களை அவர் தொடங்கிவைக்க உள்ளார்.

(ii) இதில் பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு உள்கட்டமைப்பு, சாலை இணைப்பு, ரயில் சேவைகள் உள்ளிட்ட முக்கிய துறைகளின் திட்டங்கள் அடங்கும்.

(iii) நீலகிரி மற்றும் ஈரோடு மாவட்டங்களில் ரூ.3,680 கோடிக்கும் அதிகமான முதலீட்டில், பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் நிறுவனத்தின் இயற்கை எரிவாயு விநியோக குழாய்கள் அமைக்கும் திட்டத்துக்கு அவர் அடிக்கல் நாட்ட உள்ளார். இந்தத் திட்டம் மூலம், 8.8 லட்சத்துக்கும் அதிகமான குடும்பங்களுக்கு குழாய்கள் மூலம் இயற்கை எரிவாயு விநியோகிக்கப்படும்.

(iv) சென்னை மணலியில் சுமார் ரூ.1,490 கோடி முதலீட்டில் கட்டி முடிக்கப்பட்ட மசகு எண்ணெய் கலவை ஆலையைப் பிரதமர் மோடி நாட்டுக்கு அர்ப்பணிக்க உள்ளார். இந்த ஆலை இந்தியாவின் மசகு எண்ணெய் உற்பத்தித் திறனை வலுப்படுத்தும்.

(v) தமிழ்நாட்டில் 370 கி.மீ.க்கு 89 கிராமப்புற சாலைகளை திறந்துவைக்கும் பிரதமர் மோடி, கங்கைகொண்ட சோழபுரம் அருகே தேசிய நெடுஞ்சாலை 81-இல் பசுமை புறவழிச்சாலை அமைக்க அடிக்கல் நாட்ட உள்ளார்.

(vi) தமிழ்நாடு, தெலங்கானா, கர்நாடகம், கேரளம், கிழக்கு இந்தியா இடையே ரயில் இணைப்பை வலுப்படுத்தும் வகையில் 2 அம்ருத் பாரத் விரைவு ரயில்கள், 2 விரைவு ரயில்கள், ஒரு பயணிகள் ரயில் சேவையை அவர் தொடங்கி வைக்க உள்ளார்.

(vii) தமிழ்நாடு மற்றும் கேரளத்தில் மொத்தம் ரூ.16,450 கோடி மதிப்பிலான பல்வேறு திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி, நிறைவடைந்த திட்டங்களைப் பிரதமர் மோடி தொடங்கி வைக்க உள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

7. குழந்தை திருமணம் - இந்தியாவிலும் தமிழ்நாட்டிலும் நிலவும் சூழல் :-

(i) உலகளாவிய மற்றும் தேசிய சூழல்

- உலகின் குழந்தை திருமணங்களில் 40% க்கும் அதிகமானவை இந்தியாவில் நடப்பதாகக் கூறப்படுகிறது.
- 1992-93 மற்றும் 2005-06 க்கு இடையில், இந்தியாவில் குழந்தை திருமணங்கள் தோராயமாக 7% குறைந்துள்ளன.
- தற்போது 20 முதல் 24 வயதுடைய பெண்களில், தோராயமாக 47% பேர் 18 வயதிற்கு முன்பே திருமணம் செய்து கொண்டுள்ளனர்.
- பீகார், ஜார்கண்ட், ராஜஸ்தான் மற்றும் ஆந்திரா உள்ளிட்ட பல மாநிலங்கள் இன்னும் குழந்தை திருமண விகிதங்களை 60% ஐத் தாண்டியுள்ளதாக தெரிவிக்கின்றன.
- நகர்ப்புற மையங்களுடன் ஒப்பிடும்போது கிராமப்புற இந்தியாவில் இந்தப் பிரச்சினை கணிசமாகக் கடுமையாக உள்ளது.

(ii) தமிழ்நாடு குறிப்பிட்ட தரவு

- கடந்த மூன்று ஆண்டுகளில், தமிழ்நாடு தோராயமாக 7,000 குழந்தை திருமணங்களைப் பதிவு செய்துள்ளது.
- தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் தரவுகள், ஒரே ஆண்டில் மாநிலத்தில் குழந்தை திருமணங்கள் 55% அதிகரித்துள்ளதாகக் குறிப்பிடுகின்றன.
- ஜனவரி மற்றும் நவம்பர் 2024 க்கு இடையில், மாநிலத்தில் 1,640 குழந்தை திருமணங்கள் பதிவாகியுள்ளன, இது 2023 ஆம் ஆண்டு முழுவதும் பதிவான 1,054 வழக்குகளை விட குறிப்பிடத்தக்க அதிகரிப்பு ஆகும்.
- தமிழ்நாட்டின் மேற்கு மாவட்டங்கள் குறிப்பாக பாதிக்கப்பட்டுள்ளன, அதிக விகிதங்களைக் கொண்ட முதல் பத்து மாவட்டங்களில் ஆறு மாவட்டங்கள் இதில் அடங்கும்.
- மாவட்ட வாரியான விவரக்குறிப்பு (2023):
- ஈரோடு: 150 வழக்குகள்.
- கோவை: 90 வழக்குகள்.
- நாமக்கல்: 74 வழக்குகள்.
- திருப்பூர்: 66 வழக்குகள்.
- தர்மபுரி: 58 வழக்குகள்.
- சேலம்: 51 வழக்குகள்.
- சமீபத்திய தலையீட்டு தரவு (ஜனவரி-நவம்பர் 2024):
- கோவையில், 125 புகார்களில், 35 திருமணங்கள் மட்டுமே நிறுத்தப்பட்டன, 90 திருமணங்கள் முடிக்கப்பட்டன.
- ஈரோட்டில், 186 புகார்களில், 36 மட்டுமே வெற்றிகரமாக தடுக்கப்பட்டன.
- தர்மபுரி (157), திண்டுக்கல் (165), மற்றும் கடலூர் (131) ஆகியவை அதிக புகார்களைக் கொண்ட பிற மாவட்டங்கள்.

(iii) சட்ட கட்டமைப்பு மற்றும் அமலாக்கம்

- குழந்தை திருமண தடைச் சட்டம் (2006) பெண்களுக்கு சட்டப்பூர்வ திருமண வயதை 18 ஆகவும், ஆண்களுக்கு 21 ஆகவும் நிர்ணயிக்கிறது.
- மாவட்ட சமூக நல அதிகாரிகள் குழந்தை திருமண தடை அதிகாரிகளாக பணியாற்றுகிறார்கள், இருப்பினும் அவர்கள் பெரும்பாலும் கூடுதல் நிர்வாகப் பணிகளைச் செய்கிறார்கள்.
- பஞ்சாயத்துத் தலைவர்கள் தலைமையிலான கிராம அளவிலான குழுக்களும் இந்தத் திருமணங்களைத் தடுக்கும் பணியை மேற்கொள்கின்றன.
- குழந்தைத் திருமணங்களில் ஈடுபடுபவர்கள் மீது வழக்குத் தொடர அதிகாரிகள் போக்சோ சட்டத்தையும் பயன்படுத்துகின்றனர்.
- பெண்கள் உதவி எண் (181) அல்லது அவசர எண் (100) மூலம் வழக்குகளைப் புகாரளிக்க குடிமக்கள் ஊக்குவிக்கப்படுகிறார்கள்.

(iv) காரணங்கள் மற்றும் சமூக காரணிகள் :-

- கல்வி அடைவதற்கும் திருமண வயதுக்கும் நேரடி தொடர்பு உள்ளது:
- கல்வி இல்லை: 77% பேர் 18 வயதுக்கு முன்பே திருமணம் செய்து கொண்டவர்கள்.
- ஆரம்ப/இரண்டாம் நிலை கல்வி: 62% பேர் 18 வயதுக்கு முன்பே திருமணம் செய்து கொண்டவர்கள்.
- உயர் கல்வி: விகிதம் கணிசமாகக் குறைந்து 27% ஆக உள்ளது.
- உயர்நிலைப் பள்ளிப் படிப்பை இடைநிறுத்துபவர்கள், இளவயது திருமணங்களுக்கு முதன்மையான வினையூக்கியாக அடையாளம் காணப்படுகிறார்கள்.
- இளம் பெண்கள் பிரசவத்திற்காக மருத்துவமனைகளில் அனுமதிக்கப்படும்போதுதான் பல நிறைவு வழக்குகள் வெளிச்சத்திற்கு வருகின்றன.

(v) தாக்கங்கள் மற்றும் விழிப்புணர்வு

- குழந்தை திருமணம் இளம் பெண்களுக்கு கடுமையான உடல் மற்றும் மனநலப் பிரச்சினைகளை ஏற்படுத்துவதாகக் குறிப்பிடப்படுகிறது.

- தமிழக அரசு இந்த நடைமுறையின் ஆபத்துகள் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த தெரு நாடகங்கள், பொம்மலாட்ட நிகழ்ச்சிகள், பேரணிகள் மற்றும் கருத்தரங்குகள் மூலம் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்துகிறது.

8. கேரளாவை கேரளம் என மறுபெயரிடுதல் :-

(i) பெயர் மாற்றும் செயல்முறை மற்றும் ஒப்புதல்

- பிப்ரவரி 24, 2026 அன்று, பிரதமர் தலைமையிலான மத்திய அமைச்சரவை, மாநிலத்தின் பெயரை "கேரளா" என்பதிலிருந்து "கேரளம்" என மாற்றுவதற்கான முன்மொழிவுக்கு ஒப்புதல் அளித்தது.
- கேரள மாநில சட்டமன்றம் முதலில் ஆகஸ்ட் 9, 2023 அன்று விதி 118-இன் கீழ் பெயர் மாற்றத்திற்கான தீர்மானத்தை நிறைவேற்றியது. திருத்தங்களுக்காக மத்திய அரசு அதைத் திருப்பி அனுப்பிய பிறகு, ஜூன் 24, 2024 அன்று இரண்டாவது முறையாக இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.
- எட்டாவது அட்டவணையில் உள்ள அனைத்து அதிகாரப்பூர்வ பதிவுகள் மற்றும் மொழிகளிலும் மாற்றத்தை இறுதி செய்ய, அரசியலமைப்பின் பிரிவு 3-இன் கீழ் நாடாளுமன்றத்தில் ஒரு திருத்த மசோதா அறிமுகப்படுத்தப்பட வேண்டும்.
- மலையாளத்தில் அதன் பெயருடன் இணைந்து, அனைத்து மொழிகளிலும் மாநிலம் "கேரளம்" என்று குறிப்பிடப்படுவதை உறுதி செய்ய இந்தத் தீர்மானம் முயல்கிறது.

(ii) சொற்பிறப்பியல் மற்றும் வரலாற்று சூழல்

- மலையாளத்தில், "கேரா" என்பது தென்னை மரத்தையும், "ஆலம்" என்பது நிலத்தையும் குறிக்கிறது, அதாவது "தென்னை மரங்களின் நிலம்".
- சில அறிஞர்கள் இந்த பெயர் "சேரா" மற்றும் "ஆலம்" என்பதிலிருந்து தோன்றியதாகக் கூறுகின்றனர், இது சேரர்களின் நிலம் அல்லது கடலில் இருந்து மீட்டெடுக்கப்பட்ட நிலத்தைக் குறிக்கிறது.
- "கேரளா" என்ற சொல் காலனித்துவ கால எழுத்துப்பிழையாக அடையாளம் காணப்படுகிறது. உச்சரிக்க கடினமாக இருந்ததால், பிரிட்டிஷ் அதிகாரிகள் பெரும்பாலும் "m" அல்லது "n" இல் முடிவடையும் உள்ளூர் பெயர்களை மாற்றினர்.
- மலையாளம் பேசும் பகுதிகளை இணைத்த மாநில மறுசீரமைப்புச் சட்டத்தைத் தொடர்ந்து, நவம்பர் 1, 1956 அன்று மாநிலம் அதிகாரப்பூர்வமாக உருவாக்கப்பட்டது. இந்த நாள் உள்ளூர் மக்களால் "கேரளா பிரவி" என்று கொண்டாடப்படுகிறது.

(iii) மொழியியல் மற்றும் கலாச்சாரக் கண்ணோட்டங்கள்

- சுதந்திர இயக்கத்திலிருந்து பாதுகாக்கப்பட்டு வரும் மாநிலத்தின் மொழியியல் மற்றும் பாரம்பரிய அடையாளத்தை மீட்டெடுப்பதில் இந்த மாற்றம் ஒரு குறிப்பிடத்தக்க படியாகக் கருதப்படுகிறது.
- குடியிருப்பாளர்கள் "கேரளமியர்கள்" என்று அழைக்கப்படுவார்களா என்பது குறித்த கேள்விகளுக்கு பதிலளிக்கும் விதமாக, மொழியியல் வல்லுநர்கள் குடியிருப்பாளர்கள் தொடர்ந்து "கேரளர்கள்" என்று அழைக்கப்படுவார்கள் என்று தெளிவுபடுத்தினர்.

(iv) பிற மாநிலங்களுடன் ஒப்பீடு

- சுதந்திரத்திற்குப் பிறகு பெயர் மாற்றங்களுக்கு உள்ளான பல இந்திய மாநிலங்கள்:
- ஐக்கிய மாகாணங்கள் உத்தரப் பிரதேசம் (1950) ஆனது.
- மெட்ராஸ் தமிழ்நாடு (1969) ஆனது.
- மைசூர் கர்நாடகா (1973) ஆனது.
- உத்தராஞ்சல் உத்தரகண்ட் (2007) ஆனது.
- ஒரிசா ஒடிசா (2011) ஆனது.
- மேற்கு வங்கத்தின் பெயரை "பங்களா" (2016 இல் முன்மொழியப்பட்டது) என மாற்றுவதற்கான கோரிக்கை மத்திய அரசிடம் நிலுவையில் உள்ளது.